செய்தித் தாளாகப் பதிவுபெற்றது [illegible]

உ
சிவமயம்

# இந்துசாதனம்

சைவ பரிபாலன சபை வெளியீடு. பிரதி விலை: சதம் 20

ஆரம்பம்: விரோதி ஸு (1889) ஆவணிமீ 28-ம் உ அச்சகம்: சைவப்பிரகாச அச்சியந்திரசாலை, 450. காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 356

புத்-அஎ] யாழ்ப்பாணம்:- இராக்ஷத ஸு தை மீ கரு உ வெள்ளிக்கிழமை (30 - 1 - 1976) [இல: ச0


திருக்கேதீச்சரச் சமுத்திர தீர்த்தம்

# இதனைப் பாலித்த திருக்கேதீச்சரவன் இன்னம் பாலிப்பாளுக

( வித்துவான் மு. கந்தையா B. A. )

ஆலயங்களில் எழுந்தருளியிருக்கும் மூர்த்திக்கு அபிஷேகஞ் செய்து ஏந்தி எடுத்தநீர் தீர்த்தம் என வழங்குகிறது. அங்குள்ள மூர்த்தியின் திருமேனிப் பரிசம் பெற்றமை பற்றியே அதற்கு இப்பெயர் வாய்த்திருப்பக் காண்கின்ேறாம். தீர்த்தமென்றால் என்ன என்ற வினவுக்கு விடை இதிலேயே தங்கியிருப்பக் காணலாம்.

தீர்த்த என்ற சொல் லுக்கு வடமொழியகராதி 22 வகையிற் பொருள் விரிக்கின்றது. அவற்றுள் ஒன்று A sacred or holy personage என்பது. 'தூய்மையான அல்லது புண்ணிய சொரூபமான ஒருவர்' என்பது தமிழில் அதன் பொருளாகும், இக்குறித்த இலக்கணத்துக் கமைவான ஆலய மூர்த்தியின் பரிசமோ, ஞானிகள் மகர்ஷிகள் போலவாரின பரிசமோ பட்ட நீர்நிலைகளும் தீர்த்தம் என்ற பெயருக்குரியவாயின, பிரசித்தி பெற்ற தீர்த்த வரலாறுகள் ஒவ்வொன்றும் இவ்வுண்மையை மெய்ப்பிக்கின்றன. நகுல முனிவர் நீராடிப் பரிசிக்கப் பெற்றதனாலே தான் பெற்ற மகிமையைக் கீரிமலைத் தீர்த்தம் என்றும் எடுத்தியம்பிக் கொண்டிருக்கின்றது கண்கூடு

திருக்கேதீச்சரச் சமுத்திரத் தீர்த்தமும் இத்தகையதேயாம். இத்தலத்துத் தொன்மையை நோக்கும் போது அகஸ்தியர், துவஷ்டா, மயன்கேது முதலாய மகாநுபாவர்கள் இங்கு வந்திருந்து சுவாமி வழிபாடாற்றிய செய்திகள் அறிய வருகின்றன. அத்தகைய மகாநுபாவர்களின் மெய்ப்பரிசம் பெற்ற தீர்த்தம் திருக்கேதீச்சர சமுத்திர தீர்த்தமாதல் ஒருதலை.

தீர்த்தமாடுதலைச் சிறந்ததொரு சிவவழிபாடாகக் கொண்ட மகிமை நம் சைவத்துக்கமைந்த தனிப் பெருஞ் சிறப்பாகும். தீர்த்தமாடுதலின் மகிமையைச் சைவநூல்கள் பலவும் பலவாறு போற்றியுரைப்பக் காண்கின்றோம். அப்பர் சுவாமிகளின் நான்காம் திருமுறைப் பாடலொன்று அதன் மகிமையை அலாதியாக எடுத்துணர்த்துகின்றது.

"களித்துக் கசிந்திட்ட காதற் கனிவோடு காவிரிவாய்க், குளித்துத் தொழுதுமுன் நின்றஇப் பத்தரைக் கோதில் செந்தேன், தெளித்துச் சுவையமுதூட்டி அமரர்கள் சூழிருப்ப அளித்துப் பெருஞ் செல்வமாக்கு மையாறனடித்தலமே" என்பது அப் பாடல்.

காவிரி தீர்த்தமாடிவிட்டுத் தரிசனை புரியும் மெய்யன்பர்களுக்கு ஐயாற்றப்பன் பிரத்தியேகமாக விசேட உயர்தர அருள் வழங்குமாற்றைச் சுவாமிகள் இங்கு கண்டு காட்டியருள்கின்றார். தேன்தெளித்தல், சுவையமுதூட்டல் அமரர் நாயகமாய் அவர்கள் நடுவிருக்கச் செய்தல் என்ற இத் தீஞ்சுவைத் தமிழ்ப்பொழிவு ஐயாற்றப்பனின் விசேட அருட்பொழிவின் அருமையை நாம் சுவைக்க வைக்கின்றது.

திருக்கேதீச்சரத்தான் இத்தகையதொரு உயர்

( வளர்ச்சி 2 ஆம் பக்கம் )

## மகா கும்பாபிடேகம்

யாழ். சங்கானை மேற்கு வடலியடைப்பு புதருனை ஸ்ரீ சித்தி விநாயகர் புனராவர்த்தன மகா கும்பாபிடேகம் தைத் திங்கள் 23 - ஆம் நாள் [ 6 - 2 - 76 ] வெள்ளிக்கிழமை காலை 7 - 10 முதல் 8 - 43 வரையில் வரும் சுப வேளையில் நிகழும். கிரியாரம்பம் 2-2-76 இல் ஆரம்பமாகும

உ

## புலவர்மணி நினைவு விழாவில் பண்டிதமணியின் ஆசியுரை

வணக்கம்.

"வடமொழியுந் தென்றமிழும் மறைகள் நான்கும்
ஆனவன் காண்"
"ஆரியன் கண்டாய் தமிழன் கண்டாய்"

என்பன அப்பர் சுவாமிகளின் அருள்வாக்குக்கள். வடமொழியாகிய ஆரியத்தைத் தேவபாஷை என்கின்றார் கம்பர்-

தேவர்களுக்கு மற்றொரு பெயர் புலவர்.

புலவர்களாகிய தேவர்கள், புலவர் புதல்வராகிய புலவர்மணியைத், தமது புலவருலகில் வருக வருக என்று எதிர்கொண்டு வரவேற்று உபசரிக்கும்போது,

"தமிழ்ப்பற்று மிக்குடையீராகிய புலவர் மணியே, அவ்வாறே வடமொழியாகிய ஆரியத்திலும் பற்றுமிக்குடையீராக" என்று வரம் அருளி, "இருமொழிக்கும் கண்ணுதலார் முதற் குரவர்" என்ற செய்யுளின் விழுமிய பொருளை, இளமுருகனார் ஆகிய திரு சோ. பாலசுப்பிரமணியர் வாயிலாகக் கேட்டு, மகிழ்ச்சி மிக கூர்ந்து, மேலும் வரங்கள் அருளி, ஆத்ம சாந்தி செய்து வைப்பார்களாக என்று திருவருளைப் பிரார்திப்போமாக.

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

திருக்கேதீசுவரம்

## இன்று சமுத்திர தீர்த்தப் பிரதிட்டை

திருக்கேதீசுவரத்தில் இன்று தை அமாவாசை விழாவின்பொழுது சமுத்திரதீர்த்த ஆரம்ப வைபவ நிகழ்ச்சிகள் நடைபெறும் என அறிகிறோம்.

1. ஆலயத்திலிருந்து சமுத்திரக்கரைக்கு கலசங்கள் அபிஷேகத் திரவியங்கள் சகிதம் வேத, தேவார கோஷங்களுடன் செல்லுதல்.
2. சமுத்திர தீர்த்தக் குன்றுக்கு பொங்கல்.
3. கரையும் கடலும் என்ற திருமுறைப் பாடலோடு அடியார்கள் தீர்த்தக்குன்றை வலம்வந்து வணங்குதல்.
4. அமாவாசை தருப்பணம் செய்வோரும் ஏனையோரும் சமுத்திர தீர்த்தமாடல்.
5. சமுத்திர தீர்த்தக் கரையிலிருந்து சிவபுராண பாராயணத்துடன் சுவாமி அம்பாள் சந்நிதியை அடைதல்.

சைவ அன்பன்
மு. ஞானப்பிரகாசம்

## சமுத்திர நீரைப் பாலாவிக்கு அழைப்போம்

[ வழக்கறிஞர் திரு: சு: சிவசுப்பிரமணியம் அவர்கள் யாழ் சைவபரிபாலனசபை சிரிய அங்கத்தவர் திருக்கேதீஸ்வர ஆலயத் திருப்பணிச் சபை கூட்டுஸ்தாபகர் ]

(முன் வளர்ச்சி – 2)

பாலாவிக் குளத்தை சைவமக்கள் எல்லாக்காலத்திலும் தீர்த்தமாக பாவிக்க முடியாமல் இருக்கிறது. மேல் குறிப்பிட்டபடி பாலாவிக்குளம் தன் வலிமையால் ஒரு தீர்த்தமாக இருக்கவில்லை, நீருக்கு மழையையும் கட்டுக்கரைக் குளத்தையும் நம்பியிருக்கிறது. பரிசுத்தமான தீர்த்தத்துக்கு சுயமாய் நீரூற்று இருப்பது ஒரு இன்றியமையாத ஏதுவாகும்.

எல்லாக் காரணங்களையும் மனதிற்கொண்டு கவனித்தால் சமுத்திர தீர்த்தம் திருக்கேதீஸ்வரத்தில் இன்றியமையாததாகும். நகுலேஸ்வரம், கீரிமலை சமுத்திர தீர்த்தமாயிருக்கிறது. மாவிட்டபுரத்தில் எழுந்தருளியிருக்கும் கந்தப் பெருமானும் தீர்த்தம் கொடுக்க கீரிமலை சமுத்திரத்திற்குதான் செல்கிறார். திருக்கோணமலையிலிருக்கும் தீர்த்தமும் சமுத்திர தீர்த்தமாகும். ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் தீர்த்தமும் சமுத்திர தீர்த்தமாகும். இந்தியாவில் சில ஸ்தலங்களுக்கு சமுத்திர தீர்த்தம் தான் இருக்கிறது. திருச்செந்தூர், ராமேஸ்வரம், கன்னியாகுமரி முதலிய ஸ்தலங்களில் சமுத்திர தீர்த்தங்களைத்தான் பாவித்து வருகிறார்கள்.

(வளர்ச்சி 3ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவரானினம் வீழ்க தண்புனல்
வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே சூழ்க வையகமுந் துயர்தீர்கவே:
திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

இராக்ஷத ஹூ தை மீ கசு-உ வெள்ளி

## இனிய உளவாக இன்னுதவை ஏன்?

உலக சமயங்கள் யாவும் அன்பெனனும் பண்பை அனுசரிக்கின்றன வென்ற உண்மையை சமயிகள் உணர்வார்களேயானுல் கரும்பிருக்க இரும்பு கடித்தல்லலுற மாட்டார்கள்.

மாயையின் ஈறும் விலகி மாண்புடன் உலக அலுவல்களில் ஈடுபடுவதையே மகத்தான வாழ்க்கையென்பர் அறிஞர். வாழ்வாவது மாயம் என்பது திருமுறைக்கருத்து. இம்மாயத்திஞல் இன்னல் எய்தாது இறைவன் கழலடி அடைவதையே வாழ்க்கைப்பயனென்பர். எனவே வாழ்வாங்கு வாழ, நல்லவண்ணம் வாழ, வழியுண்டென்பதை நாமறிந்தும் அந்நெறியை நாடாது அல்லற்படுவதென்னையோ?

நெறிமுறை தவருது நின்ற நாயன்மார்கள் துறவிகள் இல்லறத்தில் இருந்து உலகம் நல்லவழியில் நடப்பதற்கு அரசியலும் ஓர் ஏது என்பதுண்மையே அந்த அரசியலும் சமய இயலுக்கமைவதாயின் நன்மை பயப்பதாகும். இவ்வாறு வாழ்ந்து ஏனைய மக்களுக்கு வழிகாட்டியாக விளங்கிய மகாத்மா காந்தியின் இவ்வுலக வாழ்க்கை ஒரு கொலேஞஞல் முடிவுற்ற நாள் 1948 முதலாம் மாதத்து முப்பதாவது நாள். இன்று அந்த நாளின் இருபத்தொன்பதாவது நினைவு நிகழ்ச்சி இந்நாளில் காந்திப் பெரியாரின் இலட்சிய வாழ்க்கை அரசியல் வாதிகளுக்கு ஒரு எடுத்துக்காட்டாக இருக்கட்டும் என்று நாம் இடித்து இடித்துரைக்கின்ருேம்.

வன்செயல்களால் மாநிலம் எங்கணும் மக்கள் வாடுகின்ருர்கள். அரசநிலை அமைதியற்று அசைவுறுகின்றது. கொலை மலிந்துவிட்டது பயங்கர ஆயுதங்களை எல்லோரும் பயன்படுத்தும் பாதக நிலைமையுண்டாயிருப்பதை மாற்றியமைக்க மகாத்மா வழியே இன்று இன்றியமையாதது என்று மக்கள் உணர்ந்து செயற்படுதல் வேண்டும்.

வன்செயல் புன்செயலாகும். வாழ்வைப் பாழாக்குவதற்கேதுவானது. ஆகவே அன்பே சிவம் என்ற நெறியாளர்களாகிய சைவமக்கள் வாழ்க்கையில் எவ்வகையிலும் வன்செயலில் ஈடுபடாதிருப்பது முறையாகும். புலாலுண்ணுப் புனிதத்தை நெறியாகக் கொள்ளும் சைவமக்கள் மாமிசமும் மதுவும் அருந்துபவர்களின் மனப்பான்மை கொள்ளமாட்டார்களல்லவா?

## சைவ மகாசபைச் சிறப்பு மாநாடு

புலவர் பருத்தியூர் திருந்து இறைபணியாற்றிய சந்தானராமன் M. A. அவர்கள் சைவமும் அறிவியலும் என்ற பொருள்பற்றி அகில இலங்கைச் சைவ மகாசபைச் சிறப்பு மாநாட்டில் உரையாற்றும் பொழுது அறிவின் தொன்மை சைவத்தின் தொன்மையுடன் இணைந்திருக்கின்றதென்றும் சைவநெறி அறிவியலின்பாற்பட்டதென்றும் பல உதாரணங்கள் காட்டி விளக்கினர்.

திருமதி ஹேமா சந்தானராமன் M. A. 'சைவமகளிர்' என்ற பொருளையெடுத்து திருத்தொண்டர்களாக விளங்கியவர்கள் பலர் இல்லறத்தில் தமது மனைவியரும் சேர்ந்து இறைபணியாற்றிய உண்மையைப் பெரியபுராணத்திலிருந்து சுட்டிக்காட்டினர்.

இந்த மாநாடு காங்கேசன்றுறை மகாவித்தியாலயத்தில் சென்ற புதன் அன்று மாலை 5 மணிக்கு திரு. நம. சிவப்பிரகாசம் அவர்கள் தலைமையில் நிகழ்ந்தது சபைப் பொதுக் காரியதரிசி பண்டிதர் மா. குமாரசுவாமி ஆசிரியர் திருமுறை ஓதினர் கல்லூரி அதிபர் திரு. இராஜ. சண்முகரத்தினம் B. A. வரவேற்புக் கூறினர்.

மாநாட்டை மாவைஆதீனப் பிரதமகுரு பிரம்மஸ்ரீ சு. து. சண்முகநாதக் குருக்கள் தொடக்கிவைத்தனர்.

செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி ஆசிவழங்கும் பொழுது இத்தகைய மாநாடுகளின் அத்தியாவசியகத்தை புலப்படுத்தினர்.

பண்டிதர் இ. நமசிவாயம் தொகுப்புரை வழங்கியபின் பண்டிதர் வே. சங்கரப்பிள்ளை சபைத் தனுதிகாரி நன்றியுரை கூறினர் மயிலை திரு. கா. துரைஐயா குழுவினர் பக்திப்பாடல் நிகழ்ச்சியை நடத்தினர்.

## திருக்கேதீச்சுவரம்

( 1-ஆம் பக்க வளர்ச்சி )

பேரருள் வழங்க நமக்குத் தந்து வைத்த சாதனங்களிலொன்று இச் சமுத்திர தீர்த்தமென்றுணர்தல் நம் தலைக்கடனுகும். கடந்த சில வருடங்களாகத் திருக்கேதீச்சரத்தில் நிகழ்ந்துவரும் புதைபொருட் கண்டு பிடிப்புகளுள் எல்லாவற்றுக்கும் முன்னணியில் நிற்கற்பாலது இப்போ இரண்டொரு வாரங்களுக்கு முன் அன்பர் சிலராற் கண்டுபிடிக்கப்பட்ட இச் சமுத்திர தீர்த்தக் கண்டுபிடிப்பென்றல் மிகையன்று.

திருக்கேதீச்சரமான, திருக்கேதீச்சரத்துக்குப் பாலாவி தீர்த்தம் ஒன்று மட்டுமன்று, பாலாவி தீர்த்தம் சமுத்திர தீர்த்தம் என இரண்டுமட்டுமன்று தமிழ் நாட்டுப் பெருந்தலங்களில யாம் காண உள்ளது போன்று சப்த தீர்த்தமோ, தச தீர்த்தமோ ஏகாதச தீர்த்தமோ இருந்திருத்தல் அதன் தகைமைக்கு இன்றியமையாத தென்றல் உண்மைமேல் உண்மையாகும். இன்று இச்சமுத்திர தீர்த்தம் வெளியாயினமைபோன்று ஏனைய தீர்த்தங்களும் நாளடைவில் வெளியாகத் திருவருள் பாலிப்பதாக.

### யோகாசன வகுப்புகள்

யாழ். பண்ணை மீனுட்சி வீதியிலுள்ள சைவமாமன்றக் கட்டிடத்தில் சுவாமி சித்தானந்த ஜோகி அவர்களால் யாழ். பெரிய கடைவீதியிலுள்ள வர்த்தக தாபன உரிமையாளர்களும், தொழிலாளர்களும், மற்றையோரும் பயனடையும் பொருட்டு யோகாசன வகுப்புக்கள் சனிக்கிழமைகளில் மாலை 5 மணி தொடக்கம் 6 மணிவரைக்கும் ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 6-30 க்கும், மாலை 5 மணி தொடக்கம் மாலை 6 மணிவரைக்கும வகுப்புக்கள் நடத்தவுள்ளார். பங்குபற்ற விரும்புவோர் இவ்வரிய சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தும்படி கேட்டுக் கொள்ளப்படுகிருர்கள்.

இதற்கான விளக்கப்படங்களையும் குறிப்புக்களையும் யாழ். மில்க்வைற் சவற்காரத் தொழிலகத்தினர் வளங்குவார்கள். இவ்வகுப்புக்கள் 1-2-76 அன்று ஆரம்பமாகவிருக்கிறது.

## தமிழ் மரபு காத்த மணி

### பேராசிரியர் சு. வித்தியானந்தனின் ஆசி

[17-1-76 அன்று யாழ். வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் சைவ பரிபாலன சபை ஆதரவில் நடைபெற்ற புலவர் மணி அவர்களின் இரங்கற் கூட்டத்திற்கு பேராசிரியர் சு. வித்தியானந்தன் அவர்கள் அனுப்பி உதவிய ஆசியுரை]

இலங்கைக் கவிஞர் பரம்பரையை இலங்கவைத்தோரில் நவாலியூர் சோமசுந்தரப் புலவருக்குத் தனியிடம் உண்டு. தகப்பனின் வழியிலே சென்று, கடந்த அரை நூற்றாண்டுக்கு மேலாக ஈழத்துக் கவிதை உலகிலேயே தமக்கென ஒரு சிறப்பிடம் வகுத்துக்கொண்டவர் புலவர்மணி பண்டிதர் சோ. இளமுருகனுர் அவர்கள்.

அன்னருக்கும் எமக்குமுள்ள தொடர்பு இருபத்தைந்து ஆண்டுகளுக்கு மேற்பட்டது. இறுதியாக நாம அவருடன் தொடர்பு கொண்டது 1974 ஆம் ஆண்டு நடைபெற்ற உலகப் பிரசித்திபெற்ற தமிழ் ஆராய்ச்சி மாநாட்டின் போதேயாகும். உடல்நலக் குறைவினுல் இம்மாநாட்டிற் பங்குபற்ற முடியவில்லை என்றும், முதன் முறையாக யாழ்ப்பாணத்தில் நடைபெறும் அம்மாநாடு உலக முக்கியத்துவம் வாய்ந்ததெனவும், இன உணர்ச்சியும் மொழிப்பற்றுமுள்ள எல்லோராலும் வரவேற்கப்பட வேண்டிய மாநாடு என்றும் அவர் எமக்கு எழுதியிருந்தார். தமிழ் மாநாட்டிற்கு அவர் சய்ய விரும்பிய பணிகளை அவரது மகன் வைத்திய கலாநிதி இளமுருகனுர் பாரதி அவர்கள் குறைவின்றிச் செய்துதவினுர்.

புலவர்மணி இளமுருகனுர் அவர்களின் தடித்த தமிழ்மொழிப் பற்றையும் இனப் பற்றையும் அன்னரது கவிதைகளிலும் கட்டுரைகளிலும பரக்கக் காணலாம். தமிழ் மரபின் பாதுகாவலனுக விளங்கிய அப்பெரியார் சிறந்த நாவன்மையும் பெற்றவர். இன்று தமிழிற் பேசிப் பாடி எழுதி வருபவர் பலரை உருவாக்கிய பெருமை புலவர்மணிக்கு உண்டு. தமது வாழ்க்கையின் இறுதிக் காலத்தை இறைவனின் திருவருட் பெருமையைப் பேசுவதிலேயே பயன்படுத்தி வந்த புலவர்மணி அவர்களின் இலக்கியத் தொண்டின் சிகரமாக விளங்குவதே அவர் யாத்த ஈழத்துச் சிதப்பர புராணம் எனும் அரிய காவியம்.

தமிழ் மரபுவழி நின்று தமிழ்த் தொண்டினுக்கெனத் தம்மை அர்ப்பணித்த புலவர்மணி இளமுருகனுர் அவர்கள் இறைவனடிநிழற் சேர்ந்த போதும், தமது அரிய படைப்புக்கள் மூலம் அவர் எம்மிடையே இன்றும வாழ்கிருர்; என்றும் வாழ்வார். புலவர்மணி பண்டிதர் இளமுருகனுர் அவர்களின் மொழிப்பற்றையும் இறையன்பையும் இலக்கியத் தொண்டினையும் தமிழுலகம் ஏற்றிப் போற்றுமாக.

தமிழ் இலக்கிய இலக்கண மரபு வாழ்க,

யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபை நடாத்தும்

## சித்தாந்தத் தேர்வுகள்.

### 1974—1976

### தேர்வு விதிகள்

( முன் வளர்ச்சி — 2 )

1. யாழ்ப்பாணம் சைவ பரிபாலனசபை ஆண்டு தோறும் சித்தாந்த பிரவேச பண்டிதர், சித்தாந்த பாலபண்டிதர் சித்தாந்த பண்டிதர் என மூன்று தேர்வுகளை நடாத்திப் பட்டம், பரிசில், பதக்கம் முதலியன வழங்கும்.

. தேர்வுக் கட்டணம்:-

| | |
|---|---|
| சித்தாந்த பிரவேச பண்டிதர் தேர்வுக்கு | ரூபா 10-00 |
| சித்தாந்த பால பண்டிதர் தேர்வுக்கு | ரூபா 15.00 |
| சித்தாந்த பண்டிதர் தேர்வுக்கு | ரூபா 25-00 |

6. தேர்வாளருக்கு இருக்க வேண்டிய தகுதிகள்:-

(அ) சித்தாந்த பிரவேச பண்டிதர்:- சமய தீட்சை பெற்றுச் சைவாசாரமுள்ள யாவரும் தோற்றத் தகுதியுடையவர்.

(ஆ) சித்தாந்த பால பண்டிதர்:- சித்தாந்த பிரவேச பண்டிதர்கள், யா. ஆ தி பா. வீ. சங்க பிரவேச பண்டிதர்கள், சென்னை சை. சி. சமாஜ இளஞ் சைவப் புலவர்கள், பல்கலைக் கழகப் பட்டதாரிகள் முதலியோரே தோற்றலாம்

(இ) சித்தாந்த பண்டிதர்:- சித்தாந்த பால பண்டிதர்,

( வளர்ச்சி 3-ஆம் பக்கம் )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்டைக்காலப்பண்ணிசை-அதன் தற்கால நிலைமை

"இசைச் செல்வர்" திரு. மூ. குமாரசிங்கம் அவர்கள்
[ இசைவாணர் ஸ்ரீ இ. அப்பாசாமி ஓதுவாமூர்த்தி அவர்களின் சீடன் ]

( முன் வளர்ச்சி - 4 )

அடுத்துச் சந்தநடையைப் பற்றி விளக்குவாம்;

1. அருணகிரிநாதர் திருப்புகழ்:

தா னதனன தனை

தொந் திசரிய மயிரே

இதில் சந்தம் சொற்களால் நிரம்பியிருப்பதைக் காணலாம்.

2. திருஞானசம்பந்தர் தேவாரம் பண்: குறிச்சி

தா னனனன தான தானதானன

கற் றுங்கெரி யோம் பிஇஇஇஇ

சுர அமைப்பைப் பார்வையிடவும்

(எது குலகாம்போதி 1 சதுச்ர — ரூபகம்)

; பா | ப ம ரி ம பா பா || ப ம பா | த நி த ப ப த ப ம ||

. கற் று அங்கெரி யோ: ஓம் பி. இ. இ. இ.

ப ம

இ.

இதில் சொற்கள் ஐது. சந்தம் அகார - ஒகார - இகார அசைகளால் நிரம்பியிருப்பதைக் காண்க.

இவ்விதம் தேவாரங்களில் பலவித நடைகள் வருவதைக் காணலாம். (வளரும்)

# திரு. வே. விசுவலிங்கம்

அடக்கம், அமைதி, சாந்தம் ஒழுக்கம், நேர்மை, பணிவு இவற்றின் அடக்கம்.

தோற்றம்; உயரத்துக்கு அடங்காத பருமன்.

பாவம்; அங்கே சிறுபிள்ளைத்தனத்தின் நடனம்.

கடமை; தன் சக்திக்கும் அப்பால்.

ஒழுக்கம்; வரையறுத்த கோட்டுக்குள்

வாழ்க்கை; ஒக்க நோக்கிய யோகியர் நிலை.

இவை, சைவப்பிரகாச அச்சியந்திரசாலைக்கு தன் முப்பது ஆண்டுகள் சேவையை ஈய்ந்த திரு. வே. விசுவலிங்கம் அவர்கள் பற்றிய ஒரு குறிப்பின் அடக்கம்.

சைவ மணம் கமழும் நாயன்மார்கட்டைப் பிறப்பிடமாகக் கொண்டவர் வே. விசுவலிங்கம் அவர்கள். ஆரம்பக் கல்வியுடன் அச்சுத் தொழிலில் புகுந்துகொண்ட இவர் இறுதிவரை மெஷின் மைண்டராகவே வாழ்ந்து விட்டார்.

பலத்த ஒலியை எழுப்பும் சிலிண்டர் மெஷினை இயக்குபவராக தொழில் அமைந்து விட்ட காரணத்தினால் போலும் அவர் அமைதியானவராகவே வாழ்ந்து காட்டினார். அனுவசியமாக அவர் வாய்திறக்கமாட்டார். அப்படி அவர் வாய் திறந்தாலும் மிகமிக அமைதியாகவே உரையாடுவார் உரையாடுவார் என்று கூறுவது தவறு ஓர் இரு வார்த்தைகளை மட்டுமே உரைப்பார்.

சிரிப்பு மிகமிக அருமை. ஆனால் அதிற் குழந்தைத் தனம் மிளிரும்.

இயந்திரமயமான வாழ்க்கை. உடை, உணவு, பழக்கவழக்கம் ஏன், அலுவலகத்திற்கு வந்து செல்லும் வழிகள் அனைத்தும் அவ்வாறே. இவற்றில் மாற்றம் காண்பதும் அரிது - மாற்றவும் முடியாது. எந்த வகையான உணர்ச்சிகளையும் இலேசில் இனம் காட்டிக் கொள்ளாத் தன்மை.

ஐம்பத்திரண்டு அகவைகளை அமைதியாகக் கழித்து விட்ட திரு. வே. விசுவலிங்கம் அவர்கள் 23-1-76 அன்று மாரடைப்பு வியாதிக்குப் பலியானார். தாயை இரு ஆண்டுகளுக்கு முன் இழந்த அவரது இரு பெண்களும் இன்று தந்தையையும் இழந்துவிட்டார்கள்.

## யாழ் சைவ பரிபாலன சபை நடத்தும்

( 2-ஆம் பக்கத்து வளர்ச்சி )

சைவப் புலவர் முதலியோரே தோற்றலாம்.

7. (அ) ஒவ்வொரு தேர்வுக்கும்: I. இலக்கியம் II. இலக்கணம் I.I திருமுறை IV சாத்திரம் V. உரைநடை என 5 பாடங்கள் உள. ஒவ்வொரு பாடத்துக்குமுரிய வினாத்தாள் 3 மணி நேரமுடையதாக இருக்கும்.

(வளரும்)

## திருக்கேதீச்சரப் பதிகம் பாராயணம்

திருக்கேதீச்சரத்தில் இன்று நிகழவிருக்கும் சமுத்திர தீர்த்தப்பிரதிஷ்டையையொட்டி யா. நா. சை. ச. அ. கழகத்தினர் ஸ்ரீ இராஜ இராஜேஸ்வரி அம்மன் ஆலயத்தில் கேதீச்சரப் பதிகம் ஓதி வழிபாடு புரிவர்.

## 22ம் ஆண்டு வருடாந்தக் கூட்டம்

சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில சைவ சமய அபிவிருத்திக் கழகத்தின் 22ம் ஆண்டு வருடாந்தக் கூட்டத்தில் கீழ்வருவோர் நடப்பு வருட உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

போஷகர்: வித்வசிரோமணி கி. சீதாராம சாஸ்திரிகள், தலைவர்: செ. சுப்பிரமணியம், உபதலைவர்: சு. பாலசுப்பிரமணியம், செயலாளர்: பா. பாலகுகம், உபசெயலாளர்: வே. குகனேசன், பொருளாளர்: ம. கணேசலிங்கம், நூலகப் பொறுப்பாளர்: இ. கற்பகநாதன், பரீட்சைச் செயலாளர்: சைவப்புலவர் வ. கந்தசாமி, இவர்களுடன் மேலுமெண்மர் நிர்வாகசபை உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

வழமைபோல இம்முறையும் மாணவர்களுக்குச் சமய பாடப் பரீட்சையை நடாத்துவதென்றும், சிவராத்திரியன்று சிறப்பாக விழாவைக் கொண்டாடுவதென்றும தீர்மானிக்கப்பட்டன.

## தங்கமான யோசனை?



பத்தர்: 'திருநீறு பூசாதவனுக்குச் சோறு போடமாட்டேன் — கோயிலுக்குப்போகாதவனுக்குச் சோறு படைக்கமாட்டேன்'' இவ்விதமாக. தாய்மார்கள் விரதம் எடுக்க வேண்டும்'' என்று சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா உணர்ச்சி ததும்ப ஒரு விண்ணப்பம் விடுத்திருக்கிறு. வட்டுக்கோட்டை இ. வா. சங்கத்தின் சமயப்பிரசாரமாநாட்டில் இப்படி அம்மையார் கேட்டுக்கொண்டா

சித்தர்: 'காலத்தின் கோலத்தை உணர்ந்து கூறப்பட்ட கருத்துச் செறிவான நல்லுரையை நம்மவர் சிந்திக்கவேண்டும். 'பங்கந்தரும் பாணிகளை எங்க பாணி' என்று ஏந்தித் தடுமாறும் நம் குஞ்சுகள் தங்கம்மாவின் தங்கமான இந்த வார்த்தையைச்செவிமடுக்குமா?

— 'நாயன்மார் - நாதன்''

## காந்தி விழா

இருபதாம் நூற்றுண்டில் பாரத நாட்டில் தோன்றிய அவதார புருடன் மகாத்மா காந்தி அவர்களுடைய 27 வது மறைந்த தினம் எதிர்வரும் வெள்ளிக்கிழமை (30. 1. 76) கொழும்பு நகரில் முன்நாள் செனற் சபை தலைவராக இருந்த திரு A இரத்தினயக்கா அவர்களின தலைமையில் நடைபெறும் என அறிகின்றோம்.

மகாத்மா காந்தி அவர்களுடைய போதனையையும் சாதனையையும் இக்காலத்தில் மக்கள் நினைவு கூர்வது மிகவும் பொருத்தமானது மக்கள் அவரின் உயர்ந்த இலட்சியங்களை உணர்ந்தால் அவர்களின் வாழ்க்கை சிறப்படையும். இருள் காலத்தில் ஒருவன் தன்கையில் ஒளியின் துணையைக் கொண்டு வழி நடப்பது போல காந்தி அவர்களுடைய ஞான ஒளி எல்லோருக்கும் வழிகாட்டியாக அமையும்.

## சமுத்திர நீரைப் பாலாவிக்கு

1- ஆம் பக்கத்து வளர்ச்சி

கொழும்பில் இருக்கும் முகத்துவார ஸ்தலத்தில் சமுத்திர தீர்த்தத்தைத்தான் நாங்கள் பாவித்து வருகிறோம்.

எல்லாம் வல்ல சிவபெருமானுக்கும் எங்கள் சைவ சமயத்துக்கும் இறைவன் சிருஷ்டித்த சமுத்திரத்துக்கும் இருக்கும் தொடர்பு பல நூல்களில் சொல்லப்பட்டிருக்கின்றன, பின்வரும் பாடல்களில் சில எங்கள் நாயன்மார்களால் திருவாய் மலர்ந்தருளிய தேவாரங்களில் உள்ளன.

சமய மூறைகளையும் தேவாரத்தில் இருக்கும் வாக்கையும் தற்போது இருக்கும் நிலைமையையும் சிவனடியார்கள் தேவைகளையும் வருங்கால நிகழ்ச்சிகள் கவனத்துடன் மனதில் வைத்து திருக்கேதீஸ்வர மஹா ஸ்தலத்தில் பாலாவியுடன் சமுத்திர தீர்த்தத்தையும் முன்போல் தாமதமில்லாமல் கைக் கொள்வது சாலச்சிறந்ததாகும். சூரிய சந்திர பிரகாசத்துடன் வெள்ளிகள் உடைய ஒளியும் மக்களுக்கு உதவி செய்வதுபோல் சமுத்திரத்துடன் பாலாவி இருப்பது சிறந்த மனநிலையைக் கொடுக்கும்.

திருச்சிற்றம்பலம்,

அரியானை அந்தணர் தஞ் சிந்தையானை
அருமறையின் அகத்தானை அணுவையார்க்கும்
தெரியாத தத்துவனைத் தேனைப் பாலைத்
திக ழொளியைத் தேவர்கள்தங் கோனை மற்றைக்
கரியானை நான்முகனைக் கனலைக் காற்றைக்
கனைகடலைக் குலவரையைக் கலந்துநின்ற
பெரியானைப் பெரும்பற்றப் புலியூரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவாநாளே.

—திருஞானசம்பந்தமூர்த்திநாயனர்

கோல மால்வரை மத்தென நாட்டிக்
கோளர வுசுற்றிக் கடைந்தெ ழுந்த
ஆல நஞ்சுகண் டவர்மிக கிரிய
அமரர் கட்கருள் புரிவது கருதி
நீலமார் கடல் விடந்தனை யுண்டு
கண்டத்தே வைத்த பித்தநீ செய்த
சீலங் கண்டுநின் திருவடி அடைந்தேன்
செழும்பொ ழிற்றிருப் புனகூருளானே.

-சுந்தரமூர்த்திசுவாமிகள்

"தொண்டர் நாள் தொறும் துதிசெய
அருள் செய்கே தீச்சர மதுதானே".

-திருஞானசப்பந்தமூர்த்திநாயனர்

திருச்சிற்றம்பலம்

## நீதிமன்ற விற்பனவு விளம்பரம்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்

கந்தசாமி பத்மநாதன், காங்கேசன்துறை.

DCM 13105 MB எதிராக வழக்காளி

வைரவன் கைம்பெண் சிலம்பி, தனக்காகவும் தனது காலஞ்சென்ற கணவன் வைரவன் வல்லியின் உரிமைத் தத்துவகாரராகவும், அந்தோனியார் தேவாலயத்துக்கு அருகாமை, மயிலிட்டி, காங்கேசன்துறை.

எதிரி

மேற்குறித்த இலக்க வழக்கில் தீர்ந்த தீர்வைப்படியும் குறித்த கோட்டால் எனக்குக் கிடைத்த கொமிஷன் அதிகாரப்படியும் இதன்கீழ் விபரிக்கப்படும் ஆதனம் 1976-ம் ஆண்டு மாசி மாதம் 16 ஆம் திகதி (16-2-1976) திங்கட்கிழமை முற்பகம் 10-00 மணி தொடக்கம் குறித்த காணியில் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

(கோட்டால் அனுமதிக்கப்பட்ட தொகை ரூபா 16,000/)

| | | | |
|---|---|---|---|
| தீர்வைத் தொகை | ரூபா. | 3,683. 33 | சதம். |
| 2. 5. 72. தொடக்கம் 12. 10. 72 வரை 12 வீத வட்டி | ரூபா, | 125. 00 | சதம். |
| 13. 10. 72. தொடக்கம் 16, 2. 76, வரை 5 வீதவட்டி (விறபனவுத் திகதி வரை) | ரூபா. | 634, 72 | சதம், |
| வழக்குச் செலவு | ரூபா. | 576, 05 | சதம். |
| முந்திய ஏலவிற்பனைச் செலவு | ரூபா. | 95. 00 | சதம் |
| | ரூபா. | 5,114. 10 | சதம். |
| எதிரியால் கொடுக்கப்பட்ட தொகை | ரூபா. | 1500, 00 | சதம். |
| மிகுதி கொடுக்க வேண்டியது. | ரூபா. | 3,614. 10 | சதம். |

### ஆதன இடாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப் பகுதி மயிலிட்டிக் கோயிற்பற்று மயிலிட்டியிறை 'கரம்புவன' நிப. 2½ இரண்டேகத்லும் பயிர் வகைகளும், வீடும; எல்லை கிழக்கு வயிரவன் கணபதிக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம் வடக்கு அப்புத்துரைக்கும மறுபேருககுமுரிய ஆதனம். மேற்கும் தெற்கும் வல்லி கொததனுககும் மறுபேருக்குமுரிய ஆதனங்கள் இதடங்கலும். ஆனல இதனுள்ளிருக்கும் கிணற்றிலும் துர்வையிலும் மேற்கெல்லை ஆதனத்தின் மேற்கெல்லை ஆதனத்துக்குரிய 3/5 ஐந்தில் மூன்று பங்கும் தென்மேற்கெல்லை ஆதனத்துக்கு குறித்த கிணற்றுத் துர்வையில் 1/5 ஐநதிலொரு பங்தும பிறநீங்கலாக இதன் தெற்கெல்லை ஆதனததுக்குள்ளிருக்கும் கிணற்றில் 1/5 ஐந்திலொரு பங்கும் மேற்கெல்லை ஒழுங்கையிலிருந்து மேற்கெல்லை ஆதனத்திறகு வடக்கெல்லை ஓரமாக இக்காணிககு போக்குவரவு செய்வதற்கு மூன்று முழ அகல பரதை உரிததும.

'கெச்சர் வாசம்'' கி. வேலுப்பிள்ளை, J. P.
வல்வெட்டித்துறை; ஏலதாரர், நீதிமன்றவிற்பனவு ஆணையாளர்,
23-11-1975. விலைமதிப்பாளர்,

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

### THOUGHTS TO BE TREASURED

மூவணை ஏரும் உழுவதும் முக்காணி,
தாமணி கோலித் திரியுறப் பாய்ந்திடும,
சாவணை கோலி நடுவிற் செறுவு(உ)ழார்
காலணை கோலிக் களர் உழுவாரே.

There is a plough, to which three (animals) are yoked, with which a triangular field is ploughed. If they (the animals are properly directed, it (the plough) will hit a pillar. Those who do not plough the field with folded tongue (and rid it of weeds), they fetter their feet and plough barren salt land.

Hindu Organ

FRIDAY, JANUARY 30, 1976

## That Thirtieth

TWENTY EIGHT long years have rolled by since that Thirtieth day of January when that peerless patriot. the greatest of all human benefactors paid with his precious life for the courage of his conviction, conviction that was born of spiritually noble thoughts.

Mahatma Gandhi, most memorable of the martyrs of all time lived a life that had been a whole volume of correct conduct. Basing morality on the high principle of total truthfulness, Gandhiji drew such inspiration that evergised his soul-force and made it highly potential. Truthfulness, the loftist of all religious concepts, was to this savant a fountain of spiritual inspiration that moulded his entire life And thus Ahimsa became his watchword and later the slogan for the struggle of the Indian people for freedom.

Non-violence at any cost always and everywhere was the dictum of this revered devotee of TRUTH. There could not be any compromise under any circumstances with this code of conduct which was an entrenched clause in Mahatmaji's Constitution of Life. It called for complete discipline of thought, word and action. India it must be said to the credit of the ancient Hindu Culture of that vast sub-continent resolutely responded to this message and won its independence. That Thirtieth must then be the day for humanity to pay homage to the apostle of non-violence by deciding to decry violence in any form.

## MAHATMA GANDHI'S VISIT TO JAFFNA

(By I. P. THURAIRATNAM, M. A, B. Sc.)

The 28th Anniversary of the death of Mahatma Gandhi falls on the 30th inst. At this time it may be of interest to recall the Mahatma's visit to Jaffna 49 years ago.

It was the mid twenties The Freedom Movement in India was gathering momentum. The heroic struggles of Mahatma Gandhi and the Indian people against the mightiest empire in the world with the strange weapon of Satyagraha was attracting the attention of the world. The stirrings in India were causing ripples in the placid life of the youth of Jaffna. It was in this context that the Jaffna Students' Congress later known as the Youth Congress, pledged to the revival of our language, literature, music and art, was established. Earlier in the decade Dr. Kitchlieu and the Ali brothers–Mohammed and Shaukut–Mahatma Gandhi's lieutenants in the freedom struggle visited Colombo. I remember Dr. Kitchlieu's stirring oration where, referring to the Jalianwala Bagh massacre, he said, "The blood of Hindus and Muslims flowed in one common stream". This was long before the partition of India and the birth of Pakistan.

Year after year we invited to the annual sessions of the Students' Congress Indian patriots like Satyamoo.thy Prakasam, Kamaladevi Chatto pathyaya, etc. In 1927 when I was a Joint-Secretary of the Students' Congress I had the hardihood to write a letter to the Mahatma inviting him to Jaffna. I received the following prompt and gracious reply which may be of interest to friends who had in recent years asked to see the letter:-

As at the Ashram,
Sabarmati.
3-2-'27.

Dear friend,

I have your letter. During my visit to the South I should love to respond to your invitation. But there are many difficulties in the way. If I go to Jaffna, I must go to other places in Ceylon which means quite a few days there. This year I want to devote purely to Khadi work and Khadi collection. If therefore I come to Ceylon, I would want to make Khadi collections The best thing I can therefore do is to forward your letter to Sjt. C. Rajagopalachariar who is organising the tour in the South and let him decide. Please correspond with him. His address is: Gandhi Ashram, Tiruchengodu, South India.

Yours sincerely,
(Sgd) M. K. Gandhi

Mahatma Gandhi duly arrived accompanied by Sjt. C. Rajagopalachariar later Governor-General of India), his daughter, Sjt. H. M. Desai and others. They were all put up in the big house on Clock Tower Road now Mahatma Gandhi Road). The Supdt. of Police, Mr. G K. Pippet, an Englishman, gave his unstinted co-operation to us in all the arrangements that had to be made for the Mahatma's stay and his tour of the Peninsula. Mr. W. Duraiswamy, later Sir Waitilingam, was the Chairman of the Reception Committee. Mahatma Gandhi stayed in our midst for one whole week and toured the length and breadth of Jaffna. The esplanade was a sea of heads. Wherever he went multitudes gathered. Men women and children would wait at street junctions to greet the Mahatma Women fell head over heels to offer their gold chains, necklaces and bangles as gifts towards the Khadi Collection. When address papers were presented he promptly auctioned them. Every evening when he returned home some of us would sit at his feet and listen to his words of wisdom. Those were exciting days which I vividly remember. After the Jaffna tour he visited other parts of Ceylon and was received with equal enthusiasm.

The quintessence of Gandhism is Satyagraha and this was the centre of Mahatmaji's contribution to the world. The idea of Satyagraha evolved slowly and then took possession of him. He trained the people in non-violence and disciplined them. He wanted them to adopt Satyagraha as a total way of life. When they failed he fasted. If they didn't respond he would call off the movement. In his case suffering was not punitive — the result of Karma It was vicarious. His method and motive were clear and unambiguous. He used the right means to achieve the right ends. He firmly believed that with the weapon of Satyagraha India would be able in time to break the imperial power. His philosophy of truth and non-violence triumphed at last. However, one is tempted to ask at the present time, "Whither India?"

## Diploma in Hindu Civilization

Prof. K. Kailasanathakkurukkal, Professor of Hindu Civilization and Prof. K Indrapala, Dean of the Faculty of Humanities inaugurated the post-graduate diploma course in Hindu civilization at the Jaffna Campus on the 19th inst. Both of them stressed the importance and uniqueness of this course A good number of teachers and other graduates have enrolled for this course. It is to be noted that it is only in the Jaffna Campus of the University of Sri Lanka that there is a special Department of Hindu civilization with a professor, in the world.

First Examination in Humanities—1975, Jaffna Campus.

Supplementary Pass List S. Visakan.

### THE JAFFNA CO-OPERATIVE STORES LTD,

**Whereas Mrs. Thangamma Thambipillai** of Kurumpacidddy, has applied to the Directors of the above-named Company for the issue of a Duplicate Certificate in respect of 6 Ordinary Shares of Rs. 100/- each, numbered: 1331-1332; 1782; 2592-2594; registered in the name of her late husband Mr. Kandavanam Thambipillai, the originals of which are represented to have been lost or mislaid **Notice is hereby given that** if within two weeks hereof no claim is made to or no objection lodged with the undersigned the Directors will proceed to deal with the application for Duplicate Certificate the originals of which will be deemed to have been cancelled

**T. Somasundaram,**
Secretary,
The Jaffna Co-operative Stores Ltd.

420, Hospital Road,
Jaffna,
6th February, 1976.

### Sale of Unredeemed Jewellery

I shall sell by public auction the unredeemed jewellery pawned before 1-9-1974 with Mr. M. K. Mylvaganam of Kandy Road, Chavakachcheri on Wednesday 25-2-1976 commencing at 3-30 a. m. at the said pawn-shop.

"Raja giri"
643, K. K. S. Road
Jaffna

V. S. Cuttipillai,
Auctioneer.
(37 30 & 6)

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலக மெல்லாம்

Printed and published by the Proprietors, the Saiva Paripalana Sabhai, Jaffna, at their Saiva Prakasa Press 450 K. K. S. Road Vannarponnai, Jaffna on Friday January 30, 1976.

EDITOR-IN-CHIEF R. N. SIVAPIRAKAM

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org